இந்திய வரலாற்றிலேயே முதன் முதலாக ஆன்மீகத் தமிழ் இலக்கிய மாநாட்டை நடத்தியவர் நம் முதல்வர்!

‘கலைஞர் எனும் தாய்’ காவியம் வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும்!

அமைச்சர் எ.வ.வேலு எழுதிய நூல் வெளியீட்டு விழாவில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் புகழாரம்!

சென்னை, ஆக.28-

“‘கலைஞர் எனும் தாய்’ காவியம் வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும்” என்றும் “இந்திய வரலாற்றிலேயே முதன் முதலாக ஆன்மீகத் தமிழ் இலக்கிய மாநாட்டை நடத்தியவர் நம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்” என்றும் நூல் வெளியீட்டு விழாவில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசும்போது புகழாரம் சூட்டினார்.

பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் எழுதிய ‘கலைஞர் எனும் தாய்’ என்ற புத்தகத்தின் வெளியீட்டு விழா சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு ‘குன்றக்குடி அடிகளார் அவர்கள்’ பேசியதாவது:-

நம்முடைய பாராட்டுதலுக்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் எழுதிய ‘கலைஞர் என்னும் தாய்’ காவியம் இன்றைக்கு வெளியிட்டுக் கொண்டிருக்கும் நல்ல வேளையில்,

“உள்ளே உயிர் வளர்த்து
உதிரத்தால் பால் கொடுத்து
அள்ளி இடும்போதெல்லாம்
அன்பையே சேர்த்தணைத்து
தொல்லை தனக்கென்றும்
சுகமெல்லாம் நமக்கென்றும்
சொல்லாமல் சொல்லுகின்ற
தேவதையின் கோவில் அது
தினம் பசித்த முகம்கண்டு
பதறும் நிலைகண்டு
பழம்தரும் சோலையது
தினம் துடிக்கும் உயிர்கண்டு
தோளில் இடம்தந்து
அணைக்கின்ற கைகளது
அதுதான் தய்மை
அதுதான் நேர்மை
அதுதான் வாய்மை

அதற்கு பெயர்தான் தாய்மை” - என்று சொல்லும் நிலையை தமிழகத்தின் ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும், இல்லை... உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கும் தாயாகவே விளங்கி மறைந்தாலும் நம் நெஞ்சங்களில் நீங்காமல் நிறைந்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நமக்கெல்லாம் எப்போதும் தாயாகவே காட்சி தருகிற நிலைப்பாட்டில், இன்றைக்கு எப்போதும் முகத்தில் புன்சிரிப்பு; இதயம் எப்போதும் ஏழைகளுக்கான உயிர்த்துடிப்பு; வாடிய மக்களை கண்டு அரவணைக்கின்ற நல் அரவணைப்பு; இவற்றின் ஒட்டுமொத்த உருவம்தான் நமது மனிதநேய மக்கள் முதல்வர் அவர்கள். அவர்கள் இந்த தாய்க்காவி யத்தை வெளியிட்டதுதான் தனிச்சிறப்புக்குரியது.

இன்றைக்கு இயக்கத்தின் இளைய ஞாயிறாய்; உதய நாயகராய்; தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் பாராட்டுதலுக்குரிய சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்களே.

எப்போதும் தமிழ் மக்களின் உள்ளத்தில் இடம் பிடித்திருக்கும் நம் அன்புச் சகோதரர் ரஜினிகாந்த் அவர்களே.

பாராட்டுதலுக்குரிய பத்திரிகை துறையை வெறும் எழுத்துத் துறையாக கொள்ளாமல் சமூகத்தை மேம்படுத்துவதற்கான தனிப்பெரும் பணி என்று ஆற்றிக் கொண்டிருக்கும் நம் பாராட்டுதலுக்கும் பெருமைக்கும் உரிய இந்து என். ராம் அவர்களே.

பதிப்பாசிரியர் கௌரா ராஜசேகர் அவர்களே.

எல்லாவற்றிற்கும் மேலாக இதுவரை அவரை நாம் பொதுப்பணித் துறை அமைச்சராகவோ அல்லது உணவுத் துறை அமைச்சராகவோதான் பார்த்திருக்கிறோம். இன்றைக்குத்தான் இலக்கிய உலகத்தில்; மொழி உலகத்தில்; எழுத்து உலகத்தில்; தன்னிகரற்றவர் என்ற பெயரையும் இன்றைக்கு பதிவு செய்கிற நிலையில், முத்தமிழறிஞர் கலைஞர் இருந்தால் தாய் அன்போடு இதை மகிழ்ந்திருப்பார். அந்த தாய் அன்பை இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவர் மீது செலுத்தி கொண்டிருக்கும் நல்ல நேரம்.

இத்தனை ஆதீனங்கள் இருக்கும் போது நமக்கு மட்டும் தனி அழைப்பா? திராவிடத்தின் பெயரால் அழைப்பா? அல்லது திருவண்ணாமலையில் நம் ஆதீனம் இருந்ததால் ஏற்பட்ட அழைப்பா?

குன்றக்குடி ஆதீனம் தோன்றிய இடம் திருவண்ணாமலை. அதன் முதல் குரு முதல்வர் திருவண்ணாமலையில் அவதரித்த தெய்வசிகாமணி தேசிய பரமாச்சாரியார் சுவாமிகள். இன்றைக்கு அல்ல, 700 ஆண்டுகளுக்கு முன்பு. இன்றும் அவர் ஜீவசமாதி அருள் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

மகா சன்னிதானம் என்று அழைத்த பெரியார்!

வல்லாள மகராஜன் என்பவனின் பட்டத்து குதிரை இறந்துவிட்டது. அப்போது ஆண்ட அரசர். அதை அவர் உயிர்ப்பித்து தந்தார். மன்னன் பொன்னையும், மணிகளையும், வைரத்தையும் அவர் காலடியில் கொட்டினார். கண்ணால் பார்க்காமலும், கரத்தால் தொடாமலும் எடுத்துப் போ. அண்ணாமலையாருக்கு கோபுரத்தை எழுப்பு என்று ஆணையிட்டவர் தெய்வ சிகாமணி தேசிய பரமாச்சாரியார் சுவாமிகள் அவர்கள்.

திருவண்ணாமலையில் தோன்றிய ஞான ஒளிதான் தமிழக முழுவதும் விழா வந்தது நம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் என்ற உருவத்தில். 45வது மகா சன்னிதானம். எதற்கு நமக்கும் - இயக்கத்திற்கும் ஒரு தொடர்பு, நெருக்கம். நம்முடைய மகா சன்னிதானத்தை, தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களை, தந்தை பெரியார் அவர்கள் மகா சன்னிதானம் என்றுதான் அழைப்பார். “என்னங்க, இந்த சாமியாரை மகா சன்னிதானம் என்று சொல்கிறீர்கள்” என்று கேட்டார்கள். பெரியார் சொன்னார்கள், “நான் குன்றக்குடி அடிகளாரை, ஒரு முறை அல்ல, 100 முறை மகா சன்னிதானம்... மகா சன்னிதானம் என்று தான் சொல்வேன். ஏன் தெரியுமா? அவர் கடவுளுக்கு மட்டும் தொண்டு செய்பவர் அல்ல. மனித குலத்திற்கும் தொண்டாற்றுபவர். கடவுளை போற்று, மனிதனை நினை என்ற இருவழிப் பாதையில் பயணிப்பவர்” என்று சொன்னார்.

அதைத்தான் பேரறிஞர் அண்ணா இந்தி எதிர்ப்பு போராட்டம் நடைபெற்ற போது நம் அடிகள் பெருமானுக்கு விதிக்கப்பட்ட அவதாரத்தை முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்தவுடன் திருப்பி செலுத்த ஆணையிட்டவர் நம்முடைய பேரறிஞர் அண்ணா.

சட்ட மேலவை உறுப்பினராக நம் அடிகள் பெருமானை நியமித்து, அடிகள் பெருமான் எழுதிய கவிதையை இதயத்தில் கல்வெட்டாக என்றைக்கும் போற்றியவர் முத்தமிழர் கலைஞர்.

கலைஞரால் போற்றப்பட்ட எ.வ.வேலு!

அந்த மரபின் தொடர்ச்சியிலேதான் இன்றைக்கு நம் நம்மை அழைத்திருப்பார் எ.வ.வேலு. ‘எதிலும் வல்லவர் வேலு’ என்று கலைஞரால் போற்றப்பட்டவர். நம்முடைய முதலமைச்சர் அவர்களாலும் பாராட்டு பெறுகிறவர்.

இந்த காவியம் முழுவதும் தாயைப் பற்றி பேசுகிறது; தாய்மையை பற்றி பேசுகிறது; தாய்மை என்றால் கலைஞர் - கலைஞர் என்றால் தாய்மை என்பதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லை.

திருக்குறள் கலைஞரின் உயிர்த்துடிப்பு!

திருக்குறள் முத்தமிழர் கலைஞரின் உயிர்த் துடிப்பு.

தென்னாப்பிரிக்காவிற்கு மகாத்மா காந்தி அவர்கள் ஒரு இளம் வழக்கறிஞராக செல்கிறார். ஒரு வழக்கிற்கு சென்றவர், 22 ஆண்டுகள் அங்கே தங்கிவிட்டார். தென்னாப்பிரிக்க மக்கள் அவரை அங்கே தங்க வைத்துவிட்டார்கள்.

அவர் தென்ஆப்பிரிக்காவில் இருந்து இந்தியாவின் விடுதலை வரலாற்றை எழுதுவதற்காக வருகிறார். எழுத வேண்டும் என்று நினைப்போடு வரவில்லை. சாதாரண மோகன் தாஸ் ஆகத்தான் வருகிறார். குறிப்பிடுகிறார், “நான் ஒரு சாதாரண மோகன் தாஸ். என்னை யார் மகாத்மாவாக மாற்றிக் காட்டினார்கள்?”. மகாத்மா காந்தியடிகள் சொல்கிறார், “சாதாரண ஒரு மோகன்தாஜை, மனித ஆத்மாவை, மகாத்மாவாக மாற்றிக் காட்டியவர்கள் தமிழர்கள்தான். அதனால் தான் எனக்கு தமிழ் மேல் தீராத காதல் உண்டு. தமிழர்கள் மீது நீண்ட உறவு உண்டு.”

ஒரு 17 வயது பெண் தில்லையாடி வள்ளியம்மை. தென்னாப்பிரிக்காவில் திடீரென போட்ட ஒரு கருப்பு சட்டத்தை எதிர்த்து போராடினார்கள் தமிழர்கள்.

தீரமாய் போராடினார்கள். 17 வயது பெண் போராடி மரணத்தின் உச்சக்கட்டத்தில் இருக்கிறாள். ஜமக்காளத்தில் அவளை சுருட்டி காந்தியடிகள் கையில் கொடுக்கிறார்கள். காந்தியடிகள் கண்ணீர் வடித்து வள்ளியமை காதில் கேட்கிறார், “வள்ளியம்மை நீ சிறைக்குச் சென்றதற்காக வருத்தப்படுகிறாயா?” மரணத்தின் கடைசி தருவாயில் அந்த வீர மங்கை சொன்னார், “ஒருபோதும் நான் சிறைக்குச் செல்வதற்காக வருத்தப்படவில்லை. மீண்டும் ஒருமுறை சிறைக்கு செல்கிற வாய்ப்பு கிடைத்தாலும் சிறைக்குச் செல்ல சித்தமாய் இருக்கிறேன். அங்கேயே உயிரை விடுகிற வாய்ப்பு கிடைத்தாலும் உயிரை விட நான் தயாராக இருக்கிறேன்” என்று சொன்னாள். சில நாட்களில் தன் விழிகளை மூடிவிட்டாள் தில்லையாடி வள்ளியம்மை. அவருக்கு தியாக ஆலயம் எழுப்பியவர் நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

காந்தியை அஹிம்சாவாதி ஆக்கிய தமிழர்கள்!

இப்போது காந்தியடிகள் சொல்கிறார், “என்னை யார் அஹிம்சாவாதியாக ஆக்கினார்கள்? என்னை யார் மகாத்மாவாக மாற்றிக் காட்டினார்கள்? சத்தியமாக என்னை அஹிம்சாவாதியாக ஆக்கியவர்கள் தமிழர்கள்தான். அதற்காகத் நான் திருக்குறளை கற்றுக் கொள்ள நான் ஆசைப்பட்டேன். திருக்குறளை கற்றுக் கொள்ள ஆசைப்பட்ட என்னால் பணிச் சுமையின் காரணமாக கற்க முடியாமல் போய்விட்டது” என்றார். அந்ததிருக்குறளை தன் வாழ்நாள் முழுவதும் உரத்து உயர்த்தி பிடித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அதனால்தான் இந்த தாய்க் காவியம் முழுவதும் இன்னொரு குறளோவியம்போல காட்சி தருகிறது.

எண்ணிப் பார்க்கிறோம், உலகம் முழுவதும் இலக்கியங்களை புரட்டிப் பார்த்தால் எந்த அரசுக்கும் வெண்சாமரம் வீசாமல், எந்த சமயத்தின் அடையாளத்தையும் பூசிக் கொள்ளாமல், உலக மானுடத்தின் உயர்வுக்காக பேசப்பட்ட பாடப்பட்ட ஒரு அற இலக்கியம் இருக்குமேயானால் அது தேனாறு தீந்தமிழ் திருக்குறள் ஒன்றாகத்தான் இருக்கும். அந்த நிலைப்பாட்டில்தான் தன் வாழ் நாள் முழுவதும் குறளோவியம் தீட்டிய கலைஞர், குறளுக்கு உரை தீட்டிய கலைஞர், கலைஞர் எனும் தாய்தான்.

தாய்மையின் அடையாளம் கலைஞர்!

எப்படி தாயாக மாறினார்? திருச்சிராப்பள்ளியில் இருக்கும் இறைவன் அவருக்கு பெயர் தாயுமானவன். மலைக் கோட்டையில் இருந்து கீழே இறங்கி வந்தார். எதற்காக? காவிரி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. ஒருபுறத்தில் ஒரு பெண் பிரசவ வழியில் போராடுகிறாள். தாய் மறுபுறத்தில் கண்ணீர் வெள்ளத்தோடு காட்சி தருகிறாள். காவிரி ஆற்றில் வெள்ளம் அப்போது ஓடி இருக்கிறது. காவிரி ஆற்று வெள்ளத்தில் தன் பெண்ணை காப்பாற்ற முடியாமல், பெண் குழந்தை பிரசவத்தை காப்பாற்ற முடியாமல் பரிதவித்த தாய்க்கு மலையிலிருந்த இறைவன் இறங்கி வந்து மகப்பேற்று வைத்தியம் பார்த்தான். அதனால் அவனுக்கு பெயர் ‘தாயும் ஆனவன்’. கருப்பையை சுமந்திருக்கும் பெண்கள் தான் தாயாக முடியும். ஆனால் இதயத்தில் கருணையை சுரந்தால் ஆணும் தாயாக முடியும் என்பதற்கான அடையாளம்தான் தாயுமானவர்.

அப்படித்தான் வாழ்நாள் எல்லாம் ஏழைகளுக்கான இதயத்தை, கருணையை சுரக்கிறவராக கலைஞர் விளங்கினார். ஒரு தாயின் பிரசவத்திற்காக தாயுமானவர் தோன்றினார். உலகத்தில் இருக்கும் எத்தனை உயிரும் வடிந்துவிடக் கூடாது என்று உயிர் காக்கும் பயணத்தில் முதன் முதல் 108 ஆம்புலன்ஸ் வசதியை ஏற்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர். பிறகு அவர் தாய்தானே. நான் முதலிலேயே சொன்னதைப்போல் தாய்மையின் ஒட்டுமொத்த அடையாளம்.

இன்றைக்கு இளைஞர்கள் எந்த திசையில் செல்கிறார்கள். பெற்ற தாயை தந்தையை மறக்கிற நிலையில். ஒரு பள்ளியில் காலை நேரத்தில் பிரார்த்தனை வகுப்பு. மாணவர்கள் வரிசையாக சென்று அமர்கிறார்கள். அந்தப் பள்ளிக்குள் ஒரு ஒற்றை கண் உருவம் நுழைந்துவிட்டது. பார்த்த மாத்திரத்தில் மாணவர்கள் அலறி அடித்து ஓடுகிறார்கள். அய்யோ... நம் பள்ளிக்குள் ஒற்றை கண் ராட்சசி வந்துவிட்டாள். உற்றுப் பார்த்தார்கள். எல்லா மாணவர்களும் அலறி அடித்தார்கள். ஒரு மாணவன் மட்டும் அது யார் என்று பார்த்து சொன்னான், “டேய்... இது நம் வகுப்பில் படிக்கும் மணியின் அம்மா” என்று சொன்னார். அவ்வளவுதான் எல்லா மாணவர்களும் ஏளனமாய் மணியைப் பார்த்தார்கள். மணிக்கு அன்று முழுவதும் வருத்தம். அம்மாவைப் பார்த்து சொன்னான், “எதற்கு நீ பள்ளிக்கூடத்திற்கு வந்தாய்.” ஏழைத் தாய். காய்கறிகளை விற்று தன் மகனை பள்ளிக்கு அனுப்புகிற ஏழைத் தாய். அந்த தாயை, “ஏன் நீ பள்ளிக்கு வந்தாய். நீ செத்துப் போ” என்று சொன்னான் மணி. அதைக் கேட்ட அவள் துடித்துப் போனாள். அதற்குப் பிறகு மணி பள்ளி பக்கமே அந்த தாய் வரவில்லை. இவன் படித்து வளர்ந்து வெளிநாட்டுக்கு வேலைக்குச் சென்றுவிட்டான்.

ஒருநாள் பள்ளி விழாவிற்கு அவனை அழைக்கிறார்கள். பள்ளியின் விழாவில் பாராட்டை பெற்றுவிட்டு, பக்கத்தில் இருக்கும் வீட்டிற்கு சென்று பார்த்தான். வெளி நாட்டில் வேலை கிடைத்து அங்கேயே இருந்துவிட்டான். பக்கத்தில் குடிசையில் தம் அம்மாவை பார்க்கச் சென்றான். கும்மிருட்டு. ஒரு விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. கிழிந்த கோரைப்பாயில் அந்த தாய், மேல் மூச்சும் கீழ் மூச்சும் வாங்கிக் கொண்டிருந்தாள். கடைசி மூச்சை விட்டுக் கொண்டிருந்தாள். மங்கலான விளக்கொளியில் ஒரு பேப்பர் அவள் கையில் இருந்தது. பிடுங்கிப் பார்த்தான். அவனுக்காகவே அம்மா எழுதி இருக்கிறாள். “அன்புள்ள மணிக்கு... நீ பள்ளி விழாவிற்கு வருகிறாய் என்று கேள்விப்பட்டேன். அங்கு நான் வந்து உன்னை அவமானப்படுத்த மாட்டேன். எப்போதும் நீ என்னை வெறுக்கிறாய். ஆனால் இந்த அம்மா எப்போதும் உன்னோடுதான் இருக்கிறேன். கடைசியாக உனக்கு ஒரு செய்தி. நீ நன்றாக இருக்கிறாயா? இப்படி கேட்கக்கூட எனக்கு உரிமை இல்லை. இருந்தாலும் உனக்காக என் கடைசி செய்தியை சொல்லி விடுகிறேன். மகனே மணியே... என் கண்மணியே... என் கண்ணின் மணியே... நீ எப்போதும் என்னை வெறுக்கிறாய். ஆனால் இந்த அம்மா எப்போதும் உன்னோடுதான் இருக்கிறாள். ஒரு விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் உன் ஒரு கண் போய்விட்டது. அப்போது இந்த அம்மா துடித்த துடிப்பு கொஞ்சம் அல்ல. என் மகன் மணி ஒரு கண்ணோடு உலகத்தில் வாழ முடியாது. வாழக் கூடாது. அவனுக்கு இரண்டு கண்களும் வேண்டும். அதற்காக என் இரண்டு கண்களைக்கூட எடுத்துக் கொள்ளுங்கள். தேவைப்பட்டால் என் உயிரைக்கூட எடுத்துக் கொள்ளுங்கள். மகனே மணியே... என் கண்மணியே... என் கண்ணின் மணியே... என் கண்ணின் மணி ஒன்றை எடுத்துத்தான் உனக்கு பொருத்தியிருக்கிறார்கள். அந்த கண்மணி வழியே உன்னோடு எப்போதும் வாழும் அம்மா உன்னிடம் இருந்து விடைபெறுகிறேன்.”

இப்படி எத்தனையோ மணிகள். ஆனால் ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் கண்மணியாகவே வாழ்ந்தவர் தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரைத் தாய்க் காவியத்தில் மட்டுமல்ல, வாழும் ஒவ்வொரு நிகழ்விலும் நாம் நினைவு கூற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

வள்ளுவர் கோட்ட திறப்பு விழா நடந்தது எப்படி?

திருக்குறளுக்கு அவரைப் போல, திருவள்ளுவருக்கு அவரைப் போல தொண்டு செய்தவர் உலகத்தில் எவருமே இல்லை. எண்ணிப் பாருங்கள், எந்த திருக்குறள் பணியை, திருவள்ளுவர் பணியை செய்தாலும் அவருக்கு தடைகள்.

வான்புகழ் வள்ளுவர் கோட்டத்தை எழுப்பினார். அடித்தளம் முதல் கலசம் சூட்டுகிற வரை அவரது திருப்பணிதான். கல் எல்லாம் பேசுகிற பொற்சிலைகள். மண் எல்லாம் விண் முட்டுகிற கோபுரங்கள். வண்ணங்கள் எல்லாம் உயிர்ப்புடை ஓவியங்கள். கோவில் கோபுரங்கள் வள்ளுவருக்கு வனப்பான கோட்டம் எழுப்பப்பட்டது. கோட்டம் எழும்பியது. ஆனால் என்ன நடந்தது? கோட்டத்திற்கான விழா திட்டம் தீட்டப்பட்டது. எப்படி? 13 யானைகள்; 133 அதிகாரத்திற்கு 133 குதிரைகள்; 1330 ஆசிரியர்கள், 1330 ஆசிரியைகள், 1330 மாணவர்கள் என்று பெரிய ஊர்வலம். அந்த ஊர்வலத்தை திட்டமிட்டு நடத்த கனவு கண்டிருந்தார். அத்தனையும் பகற்கனவாக மாறி, வள்ளுவர் கோட்டம் எழுப்புகிறபோது, ஒரு தாய் தன் மகனின் திருமண விழாவை பார்க்க முடியாமல் ஓரத்தில் நிற்பதைப் போலத்தான் கோட்டத் திறப்பு விழா.

அதைப்போல, கன்னியாகுமரியில் 133 அடி உயரச் சிலை. வான் புகழ் வள்ளுவருக்கு, மிகப்பெரிய உலகத்தின் எட்டாவது அதிசயமாக எழுப்பப்பட்ட சிலை. அதை எழுப்புவதற்கு 1975-இல் திட்டமிட்டிருந்தார். ஆனால் அது நிறைவேறியது எப்போது? 2000 ஜனவரி 1-இல் நள்ளிரவு 12 மணி. கத்தும் கன்னியாகுமரி கடற்கரையில், தமிழ் மாமுனிவரின் திருவள்ளுவர் சிலை எழுப்பப்படுகிறது. ஒளி வெள்ளம் பாய்ச்சப்படுகிறது. கலைஞர் ஒலி பெருக்கி முன்பு பேச வருகிறார். “அத்தனை பேரையும் அழைத்துவிட்டு, என் வாழ்வின் பெரிய இலட்சியமாய் இருந்த, பெரிய கனவாக இருந்த திருவள்ளுவர் சிலை கால் நூற்றாண்டுக் கனவு. இன்றைக்குக்கூட இந்த விழா மேடையில் நான் பேச முடியுமா என்று நினைத்தேன். மருத்துவர்களிடம் கேட்டு மருத்துவர்கள் எனக்கு மருந்து கொடுத்த பிறகுதான் தன்னிலையோடு இன்றைக்கு நான் பேசுகிறேன். இது என் கனவு. ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்தார். ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்து இனி எல்லோரும் திருவள்ளுவரை ‘அய்யன் திருவள்ளுவர்’ என்று அழைத்திடுங்கள்” என்றார். கால் நூற்றாண்டுக் கால கனவு நினைவாகியது.

அதற்காக திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில் ‘திருக்குறள் முதல்வர்’ என்ற விருதினை உலக திருக்குறள் பேரவை நமது அமைப்பு வழங்கியது. அப்போது கூட அவர் குறிப்பிட்டார், “நான் செய்கிற பணி விருதுக்காக அல்ல. தமிழுக்காக, திருக்குறளுக்காக” என்று குறிப்பிட்டார்.

காயப்பட்ட, சேதப்பட்ட, ஒதுக்கப்பட்ட, புறந்தள்ளப்பட்ட மொழிதான், இன்றைக்கு செம்மொழி சிம்மாசனத்தில் ஏறி அமர்ந்திருக்கிறது. 2004-ஆம் ஆண்டில் நான்கு தமிழ்ச் சங்கங்களை கண்ட மதுரையில், முத்தமிழறிஞர் கலைஞர் என்னும் ஐந்தாம் தமிழ்ச் சங்கத்திற்கு நாமும், தமிழறிஞர்களும், சான்றோர் பெருமக்களும் கூடி விழா எடுத்தோம், நன்றி தெரிவித்தோம்.

அந்த விழாவில், இப்போது ஐயா நம்முடைய ராம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, மாக்ஸிம் கார்க்கியின் தாய்க் காவியத்தைத்தான் நினைவு கூர்ந்தோம். மாக்ஸிம் கார்க்கியின் தாய் ரஷ்யத் தாய். நீலவ்னா என்ற பெண். அவளின் அருமை மகன் பாவெல். இங்கு நம்முடைய எ.வ.வேலு அவர்களும் பாவெலை நினைவுப்படுத்தி இருக்கிறார். பாவெல் புரட்சிக்காரன். தாய் நீலவ்னா. காலம் முழுவதும் அடிமைத்தனத்தை எதிர்த்து போராடி, வாழ்வு முழுவதும் சிக்கல்கள். பாவெல் தன் அம்மாவிடம் கேட்பான், “அம்மா... உனக்கு என்றைக்கு அம்மா மகிழ்ச்சி, சந்தோஷம். நான் பிறந்த ஒரு நாள்தான் உனக்கு மகிழ்ச்சியாக இருக்க முடியும்” என்று.

இதை அப்படியே நாம் தமிழ்தாயை பார்த்து கேட்கிறோம், ‘கலைஞர் பிறந்த நாளைத் தவிர தமிழ்த் தாய்க்கு மகிழ்ச்சியான நாள் என்ன இருக்க முடியும் என்று தமிழ்த் தாய் கேட்கிறாள்’ என்று குறிப்பிட்டோம். இப்படிஎத்தனையோ செய்திகள்.

ஒட்டுமொத்த ‘நெஞ்சுக்கு நீதி’ கலைஞரின் தாய்க் காவியம்!

உலக வரலாற்றில் ‘நெஞ்சுக்கு நீதி’ என்று தனக்குத்தானே நீதி எழுதிய ஒப்பற்ற அரசியல் வரலாற்றை, சமூக வரலாற்றை தந்தவர் கலைஞர். அந்த அத்தனை வரலாற்றையும் படிப்பதற்கு நமக்கு வாய்ப்பு இருக்கிறதா? இல்லை, கலைஞர் தொடக்க நாள் தொட்டு ஒரு போராளிக்கு ஓய்வுண்டா? ஓய்வில்லை, என் கல்லறையில் எழுதுங்கள், ‘ஓய் வெடுக்காமல் உழைத்தவன் இப்போது உறக்கம் கொண்டிருக்கிறான்’ என்று எழுதுங்கள் என்று சொன்னவர். இன்றைக்கு நினைத்துப் பார்க்கிறோம். ஒட்டுமொத்த நெஞ்சுக்கு நீதி வரலாற்றையும் நீங்கள் ஒரே நூலில் படிக்க வேண்டும் என்றால் கலைஞர் எனும் தாய்க் காவியத்தை படித்தால் போதும்.

திருக்குறள் நீங்கள் கற்க வேண்டுமா? திருக்குறளுக்கு எத்தனையோ உரைகள். பரிமேலழகர் தொட்டு நேற்று வரை எத்தனையோ அறிஞர்கள் உரை எழுதியிருக்கிறார்கள். ஆனால் கலைஞரின் உரை தனித்துவமான உரை. அந்த உரைகளை எல்லாம் ஒருசேர வாசிக்க வேண்டுமா, கலைஞர் எனும் தாய்க் காவியத்தில் எல்லா குறள்களும் இருக்கிறது. அத்தனை குறள்களையும் தன் வாழ்வில் உண்மை என்று ஆக்கியவர்.

“ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்” - என்று தாய் மகிழ்வாளே, தன் மகனை சான்றோன் என்று உலகம் பாராட்டுவதைப்போல, அப்படித்தான் இன்றைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், நம்முடைய முதல்வர் அவர்களும், எதிலும் வல்லவர் வேலு என்று இதிலும் வல்லவர்தான் வேலு - எழுத்துலகத்திலும் வல்லவர்தான் வேலு என்று தன்னுடைய முத்திரையை பதிப்பித்திருக்கிறார்.

நல்ல அற்புதமாக கவிதை நடை. எவரும் எதிர்பார்க்காத புதுக்கவிதையின் ஓட்டம். படிக்க படிக்க புத்தகத்தை கையில் எடுத்தால், சில நூல்களை எடுத்தால் உறக்கம் நம்மை தாலாட்டும். ஆனால் தூங்குபவரையும் தட்டி எழுப்புகிற காவியமாக ‘கலைஞர் எனும் தாய்க் காவியம்’ இருக்கிறது.

அதற்கு நம் முதல்வர் எழுதியிருக்கும் பாராட்டுரை பொன்னெழுத்துகளில் பொறிக்கத்தக்க உரை.

அன்புக்குரியவர்களே, காலையில் பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு. ஒரு செய்தி, நம்முடைய தமிழகத்தில் உலகத் தமிழ் மாநாட்டை அண்ணா நடத்தினார். கலைஞர் அதனோடு இருந்து இயங்கினார். உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை நம் முத்தமிழறிஞர் கலைஞர் கோவையில் நடத்தினார். முதல் முதலாக இந்திய வரலாற்றில் தமிழக வரலாற்றில் - ஆன்மீகத் தமிழ் இலக்கியத்தின் மாநாட்டை நம்முடைய முதல்வர் அவர்கள் நடத்தி இருக்கிறார்கள்.

அதில் சொன்ன உயிர்ப்பான செய்தி, அனைவருக்குமான உயிர்ப்பான செய்தி இதுதான். கடவுள் நம்பிக்கைக்கு நாங்கள் எப்போதும் எதிரானவர்களும் அல்ல, தடையானவர்களும் அல்ல. அன்பே உயிர்களை நலமாக்கும். உலக ஒருமைப்பாடே உறவை வளமாக்கும் என்ற பாதையில் அறிவும், அன்பும் இணைந்தால் உலகம் அருள் மயமாகும். அறிவும், அன்பும் பிரிந்தால் உலகமே இருள் மயமாகும். அருள்மயமாகும் பாதையில் மானுடம் பயணிக்க பழனியில் ஆன்மீகத் தமிழ் மாநாடு. இங்கே அறிவுலக ஆசான் திருவள்ளுவரையும், கலைஞரையும் தாய்மை உணர்வோடு சிந்திப்பதற்கு இன்று மாலையில் கலைஞர் எனும் தாய்க் காவியம் என்றைக்கும் வரலாற்றில் நிலைத்து நிற்கும் காவியமாக படைத்துத் தந்த நம்முடைய அமைச்சர் பெருந்தகைக்கு நன்றி தெரிவித்து, இந்த நூலுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வெளியிட்டிருக்கும் முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசினார்.